**<u>இராமநாதபுரம் நகராட்சி</u>**

**இராமநாதபுரம் நகராட்சியில் 2020 நவம்பர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 30.11.2020–ந் தேதி மாலை 3.37 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் நவம்பர் 2020–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>–** மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1273**<br>**<u>பதிவு</u> செய்யப்பட்டது.** |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் நவம்பர் 2020–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1274**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான, இந்திரா நகர் கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் இருந்து, கழுகூரணி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் வரை ஏற்கனவே செல்லும் 450 MM விட்டமுள்ள PRE-STRESSED CONCRETE PIPE காட்டூரணி அருகில் சுமார் 250 மீட்டர் நீளத்திற்குட்பட்ட பகுதியில் அடிக்கடி உடைப்பு (BURST) ஆகி வருகின்றது. மேற்படி பிரதானக் குழாய் உடைப்பினால் பகுதி –I முதல் பகுதி –V வரை உள்ள மண்டல பகுதிகளில் கழிவுநீர் நீரேற்றம் செய்ய இல்லாமல் நகர் முழுவதும் ஆழ்நுழையும் குழிகள் நிரம்பி கழிவுநீர் (SEPTIC SEWERAGE) சாலைகளில் செல்கிறது. குடியிருப்பு வீடுகளிலும் வாட்டர் கிளாசட் நிரம்பி வீடுகளுக்குள் புகுந்து பொது சுகாதார கேட்டினை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமம் அடைவதுடன் நகராட்சிக்கும் கடும் அவப்பெயர் ஏற்படும் நிலை உள்ளது.<br>எனவே, தற்சமயம் அடிக்கடி உடைப்பு ஏற்படும் பகுதியான காட்டூரணி பகுதியில், நில | **தீர்மானம் எண்.1275**<br>**அலுவலக குறிப்புகள் ஏற்பு** |

| | | |
|---|---|---|
| | அமைப்பு மேடாக இருப்பதனை கருத்தில் கொண்டு, சுமார் 200 மீ நீளத்திற்கு 450 mm DI Pipe"ஆக மாற்றியமைக்கலாம். இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு தனி அலுவலரின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு –</u>1)** மன்றம் அனுமதிக்கலாம். நகராட்சி பாதாள சாக்கடை நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். திருத்திய வரவு – செலவு திட்டத்தில் உரிய வழிவகை செய்து ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2)காட்டூரணி பகுதியில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு கழிவுநீரேற்றம் பாதிக்கப்பட்டு நகரில் பொதுசுகாதாரக் கேடு ஏற்படுவதை தவிர்த்திடவும், அவரச அவசியம் கருதியும் பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதியும், காலதாமத்தினை தகர்த்திடும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.இ1/3366/2020 | |
| பொருள் எண்..4 | இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு தனியார் மூலம் 150–பணியாளர்களைக் கொண்டு, இவ்வலுவலக உத்திரவின் மூலம் 25.11.2019 முதல் 24.11.2020 வரை பணி செய்வதற்கு உத்திரவிடப்பட்டு, மேற்காணும் பணியினை மதுரை, எக்ஸர்நெட் நிறுவனம் நடத்தி வருகிறது. தற்போது மேற்கண்ட நிறுவனத்தின் பணிகாலம் நிறைவடையும் நிலையில் உள்ளது. பொதுசுகாதாரப் பிரிவில் 150– பணியாளர்களின் துாய்மைப் பணி அவசிய தேவையாக உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு எண்: 17987/பி3/2016, நாள்: 27.07.2016ன் படி, தனியார் மூலம் 3– ஆண்டுகள் கால அளவிற்கு மிகாமல், நிபந்தனைகளின் பேரில் கால நீட்டிப்பு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2019–2020 ஆம் ஆண்டுக்குரிய ஊதிய அடிப்படையில் பணி நீட்டிப்பு கோரி, மதுரை, எக்ஸர்நெட் நிறுவனம் | **தீர்மானம் எண்.1276**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | விண்ணப்பித்துள்ளதின் பேரில், மேற்படி நிறுவனத்திற்கு ஏற்கனவே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் 2019–2020 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய பட்டியல் அடிப்படையின் படி, 25.11.2020 முதல் 24.11.2021 வரை ஓராண்டு கால அளவிற்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவீனத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு: 1.</u>**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இப்பணியின் பொது சுகாதார அவசர அவசியம் கருதி, தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஓராண்டு கால பணி நீட்டிப்பு உத்திரவு வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்: 3227/2020/எச்1) | |
| பொருள் எண்..5 | இராமநாதபுரம் நகராட்சி, கணிணி பிரிவில் உள்ள UPS பழுதாகி உள்ளதால் அதனை மாற்றி புதிய UPS(Numeric Board / Onfiniti Model/ Lokra(2• LB Charger/ 192VDC/Isolation Transformer) 1 PH Input to 1 ph output Micro Processer Based online UPS System 1-எண்ணம் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.88,500/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி அலுவலக கணிணி பிரிவிற்கு அவசர பணியாதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும்ஆணையாளர் அவர்களது முன்ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்: 3410/2020/இ1 | **தீர்மானம் எண்.1277**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |
| பொருள் எண்..6 | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக பிரிவுகளில் இயங்கி வரும் பிரிண்டர்களுக்கு பிரிண்டர் டோனர்கள் மற்றும் கேட்ரிஜ்கள் டோனர்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/–த்திற்கு மன்றத்தின் | **தீர்மானம் எண்.1278**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – **1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**மேற்காணும் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோருவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்: 3421/2020/இ1 | |
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகள் 322 நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, PM SVANIDHI –திட்டத்தின் கீழ் வங்கிகளில் திரும்ப செலுத்தும் வகையிலான கடனுதவி பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/UPA–3, நாள்/21.11.202–ன் படி, புதியதாக 95–சாலையோர வியாபாரிகளை கண்டறிந்து PM SVANIDHI திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று தர நடவடிக்கை எடுக்குமாறு இலக்கு நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் சமுதாய அமைப்பாளர் ஒரு நபரே உள்ளதால் பணியினை விரைந்து முடிக்க ஏதுவாக தொண்டு நிறுவனமான ''ஏதென்ஸ் கார் டவுள் மற்றும் என்னேஷனல், எஜிகேஷனல் டிரஸ்ட், திருவண்ணாமலை'' நிறுவனம் மூலமாக கணக்கெடுப்பு மற்றும் அடையாள அட்டை பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு உரிய உத்தேச செலவினம் ரூ.40,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – **1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**இப்பணியானது பாரதப் பிரதமரின் சீரிய திட்டம் (PM SVANIDHI) ஆதலால், அவசர அவசியம் கருதி தனி அலுவலர்கள்/ முன் அனுமதி பெற்று ''திருவண்ணாமலை, ஏதென்ஸ் கார் டவுள் மற்றும் எக்கேஷனல் எஜிகேஷன் டிரஸ்ட்'' நிறுவனத்திற்கு பணி உத்திரவு மற்றும் வழங்கிடவும் மற்றும் பணிக்கு உரிய பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1279**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | 3)மேற்படி செலவினத்தை NULM திட்ட நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 4035/2016/எச்1 | |
| பொருள் எண்..8 | இராமநாதபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 27.11.2020–ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. (see table below)<br><br>மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் விலைப்புள்ளி வழங்கியுள்ள விலைப்புள்ளிதாரா் "M/s.Sivajothi Computers Centre,No.171, Vandikara Street, Ramanathapuram" அவா்களது விலைப்புள்ளியை ஏற்க, மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** –1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்காணும் பணி அவசர அவசியம் பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி | **தீர்மானம் எண்.1280**<br><br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| வ. எண் | Particulars | எண்ணம் | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரா்களின் பெயர்கள் மற்றும் வழங்கியுள்ள விலை விகிதம் / கூடுதல்/குறைவு (ரூ.) | | |
|---|---|---|---|---|---|
| | | | M/s.Sivajothi Computers Centre, No.171, Vandikara Street, Ramanathapuram | M/s.Computer Instruments, No-60, Pandikanmai Samy, Aranmanai West Street, Ramanathapuram | M/s.Sneha Systems, No-9A, P.K.Samy Street, Ramanathapuram |
| 1. | HP 12A Toner Catridge | 10 Nos | 32,000 | 35,000 | 38,000 |
| 2. | Cannon 324 Toner Catridge | 2 Nos | 11,600 | 12,000 | 12,400 |
| 3. | Samsung 205 Toner Catridge | 3 Nos | 14,400 | 16,500 | 17,100 |

| | | |
|---|---|---|
| | அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விநியோக உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்: 3421/2020/இ1 | |
| பொருள் எண்..9 | இராமநாதபுரம் நகராட்சி, அவரச அவசியம் கருதி, சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சிகளின் சட்டவிதி 15–ன் கீழ் 01.10.2020 முதல் 30.11.2020 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.1281<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு. |

| | | |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் (புதியது) TN65-AF-4353-க்கு ஆயில் சர்வீஸ், வீல் அலாய்மெண்ட் மற்றும் வாட்டர் சர்வீஸ் மற்றும் இதர பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.6,289/– |
| 2. | இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் JCB வாகனம் எண்–TN65-K–4682–க்கு முன் பக்கம் பக்கெட் டோப் பிளேட் பழுதாகியுள்ளதை பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கப்பட்டு முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே. | ரூ.33,000/– |
| 3. | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் TN65-H-0315 வாகனத்தில் உள்ள வீல்பேலன்ஸ் ஆயில் சர்வீஸ், பேரீஸ் கீரீஸ் செக்கப் ஆகியவை பழுதாகியுள்ளதற்கு பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.17,265/– |
| 4. | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக கணிணி பயன்பாட்டில் உள்ள ஜெராக்ஸ் மிஷின் Richo Gestertner MP 2001L பழுதாகியுள்ளதற்கு பழுதுநீக்க பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை | |

| | | |
|---|---|---|
| | வழங்கிய முறையே | ரூ.750/– |
| 5. | இராமநாதபுரம் நகராட்சி, வடகிழக்கு பருவமழை–2020, மற்றும் நிவார் புயலை எதிர்கொள்ளும் பொருட்டு இந்நகர் பகுதிகளில் உள்ள தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியிருப்பதை மோட்டார் மூலம் நீரேற்றம் செய்திடவும் அதற்கான Engine மோட்டார் மற்றும் இதர பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.1,67,904/– |

**அலுவலக குறிப்பு–** தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920–விதி எண்–15ன் கீழ் மேற்கண்டவாறு, மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.877/2016/இ1

**தனி அலுவலர் மற்றும்**
**நகராட்சி ஆணையர்(பொ)**
**இராமநாதபுரம் நகராட்சி**